

கடலூர் கிழக்கு மாவட்டம், முட்டம் மற்றும் கருங்குழி கிராங்களில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பிரச்சாரத்தினை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், ஒன்றிய செயலாளர்கள்அ.முத்துசாமி, வி.சிவக்குமார் தங்க.ஆனந்தன், ஜெயபாண்டியன், தொகுதி பொறுப்பாளர் விஜயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அனந்தபுரம் பேரூராட்சியில் நடைபெற்ற

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கிவைத்தார்!

செஞ்சி, டிச. 12 –

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் அனந்தபுரம் அரசு மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது.

அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன் தலைமை தாங்கினார்.செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் அமுதா கல்யாண் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.சத்தியமங்கலம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டுநலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து கடந்த நான்கு ஆண்டுகளில் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் 48போன்ற திட்டங்களை அறிவித்து நலம் காக்கும் ஸ்டாலின் என்ற மகத்தான திட்டத்தை அறிவித்துசெயல்படுத்தப்பட்டுவருவதாக பட்டியலிட்ட முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கல்வி, மருத்துவம் இரண்டும் என் இரண்டு கண்கள் என தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்துள்ளார் அந்த வகையில் முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டத் தில் பிள்ளைகளுக்கு காலை உணவு வழங்கியும் தொடர்ந்து மதிய உணவு வழங்கியும் விலையில்லா சைக்கிள், பேருந்து பயண மேற்கொள்ள பஸ் பாஸ் விலையில்லா பாட புத்தகம் உள்ளிட்ட திட்டங் களை முதலமைச்சர் வழங்கி வருகிறார்.ஏழை எளிய மக்களின் பிள்ளை கள் உயர் கல்வி படிப்பதற்கு புதுமைப்பெண், தமிழ் புதன் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கி வருகிறார். வெளிநாடுகளில் சென்று பட்ட மேற்படிப்பு படிப்பதற்கு ரூபாய் 7500 முதல் 25 ஆயிரம்ரூபாய் ஊக்கத்தொகை முதலமைச்சர் வழங்கி வருகிறார் இந்தியாவில் 28 மாநிலங்களில் விட தமிழ்நாட்டில் தான் உயர் கல்வியில் 52% பெற்றுள்ளனர்.

இதேபோல் சுகாதா ரத்தில் ஏழை எளிய மக்கள் உழைக்கின்ற மக்கள் சுகாதாரத்திலும் சமநிலையை அடைய வேண்டும் என்பதற்காக நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமை முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார். கிரா மத்தில் உள்ள அனைத்து மக்களும் தங்களின் உடல் நிலையை பரிசோதனை செய்து உடல் நலத்தை பாதுகாப்பாக வைத்துக் கொள்ள இது போன்ற திட்டங்களை தமிழ்நாட்டில் முதல மைச்சர் செயல்படுத்தி வருகிறார் மற்ற மாநிலத்தை காட்டிலும் வருடத்திற்கு 1 லட்சத்து 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் மருத்துவம்படிக்கின்ற வகையில் மருத்துவத் துறையில் பல்வேறு கட்டமைப்புகளை முதலமைச்சர் செயல்படுத்தி உள்ளதாக அவர் பெருமைப்பட தெரிவித்தார்.

முகாமில் அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத்,நகர அவைத் தலைவர் டாக்டர் கல்யாண் குமார்,அரசு மருத்துவர்கள், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள்சுமதி கிருஷ்ணமூர்த்தி, தமிழரசி கன்னியப்பன், தனலட்சுமி அறிவழகன், அன்வர் பாஷா, நிர்வாகிகள் வாசு,குமார், செல்வமணி, அனையேரி ரவி,தண்டபாணி, அண்ணாமலை, மணிமாறன், ஷாகுல், பூபாலன், ,ராமச்சந்திரன்,உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் செவிலியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முகாமில் பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல் ,மகப்பேறு, குழந்தைகள் நலன், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு தொண்டை, மன நலம் ,பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை, மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரத்தப் பரிசோதனை இசிஜி உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது.

மேலும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எக்கோ, கார்டியா கிராம், எக்ஸ்ரே அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள் எப்பட்டது.

மேலும் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்கள்கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு முகாமில்மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ் களை வழங்கினார்.

இந்த முகாமில் 1000 க்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

முன்னதாக எய்ட்ஸ்தொற்று இல்லாத குடும்பம் மற்றும் சமூகத்தை உருவாக்க பாடுபடுவதற்கும் பால்வினை நோய் இல்லாத உலகை உருவாக்க வலியுறுத்தி முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

மருத்துவ முகாமில் பயனடைந்தவர்கள் அனைத்து நோய்களுக்கும் ஒரே இடத்தில் தீர்வு காணப்படுவதால் வயதானவர்கள் எந்த ஒரு சிரமமும் இன்றி தங்களது உடல் நிலை ஒரே இடத்தில் பரிசோதனை செய்து அந்தந்த சிகிச்சைக்கு தேவையான மருந்து மாத்திரைகள் மருத்துவர்கள் கொடுத்து அனுப்புகின்றனர் இது போன்ற ஒரு உன்னதமான திட்டத்தைஅறிவித்து செயல்படுத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்தனர். அனந்தபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர்கனிமொழி அனைவருக்கும் நன்றி கூறினார்.

---

### திருக்குறுங்குடி பேரூர் செயலாளர் கசமுத்து ஏற்பாட்டில்

# மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் முன்னிலையில்!

*நெல்லை. டிச. 12 -*

*நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் மாவட்ட கழக அலுவலகத்தில் திருக்குறுங்குடி பேரூர் செயலாளர் கசமுத்து ஏற்பாட்டில் திருக்குறுங்குடி பேரூராட்சி பகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. அ.ம.மு.க. கட்சியைச் சேர்ந்த இளைஞர்கள் சுமார் 50 க்கும் மேற்பட்டோர்*

*அக்கட்சிகளில் இருந்து விலகி நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.*

*திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் தலைமையை ஏற்றும்,ஏற்ற தாழ்வுகள் இல்லாத வகையில்,பாரபட்சம் பார்க்காமல் “எல்லார்க்கும் எல்லாம்”*

*என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி நிறைவேற்றியதின் பயனாக பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் மிகுந்த மன நிறைவுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வருவதை தெரிந்து கொண்டும், முதலமைச்சர் அவர்களுக்கு,கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உறுதுணையாக இருந்து சிறப்பாக பணியாற்றி வருவதை தெரிந்து கொண்டும்,மக்களின் அடிப்படைத் தேவைகளை தொடர்ந்து மாவட்டம் தோறும் சென்று நிறைவேற்றி வருவதையும்,பார்த்து பார்த்து மாற்றுக் கட்சியினர் கழகத்தில் தங்களை தொடர்ந்து இணைத்துக் கொண்டு வருகின்றனர்.மேலும் தீவிர வாக்காளர் திருத்தம் பட்டியல் பணிகள் (SIR) தொடர்பாக கழகம் நடத்திய போராட்டங்கள் நியாயமானது என்பதை அறிந்து கொண்டும் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கழகத்தில் இணையும் சூழ்நிலை உருவாகி உள்ளது.*

*இந்த சூழ்நிலையில் நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் திருக்குறுங்குடி பேரூர் செயலாளர் கசமுத்து ஏற்பாட்டில் திருக்குறுங்குடி பேரூராட்சி பகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க.,அ.மு.மு.க.உள்ளிட்ட கட்சியை சேர்ந்த 50 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் சசிகுமார் தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிர காம்பெல் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் வரவேற்று கழக இரு வண்ண சால்வை அணிவித்து உறுப்பினர் படிவத்தை மாவட்ட பொறுப்பாளர் ம.கி ரகாம்பெல் வழங்கினார்.*

*நிகழ்ச்சியில் வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம், திருக்குறுங்குடி பேரூர் செயலாளர் கசமுத்து,திருமலை நம்பி, மாவட்ட பிரதிநிதிகள் முத்துராஜ், சங்கரபாண்டி, அவைத் தலைவர் முருகன்,வார்டு செயலாளர் வேலாயுதம்,முன்னாள் மாவட்ட பிரதிநிதி ராமலிங்கம்,ஒன்றிய பிரதிநிதி கைப்பாண்டியன்,பேரூர் கழக மாணவரணி அமைப்பாளர் ரமேஷ், தகவல் தொழில்நுட்ப அணி சக்தி முருகன்,தொழிலாளரணி ராஜேந்திரன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.*

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

# குண்டடம் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

திருப்பூர் கிழக்கு மாவட்டம், குண்டடம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.செந்தில்குமார் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. **எஸ்.சிவபிரகாஸ்** (163/2ஏ, ஆறுதொழுவு, காங்கேயம் - 638701. திருப்பூர் மாவட்டம்) அவர்கள் குண்டடம் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை, - 18 .
நாள்: 11-12-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய் ஏற்பாட்டின் பேரில் திருக்கோட்டியூர் சௌமியநாராயணப் பெருமாள் கோவிலில் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு அன்னதானத்தினை மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. அருணாசலம் வழங்கினார். உடன் நிர்வாகிகள் உள்ளனர்.

# தொழிலாளர்களுக்கு எதிராக செயல்படுவதில் பிரிட்டிஷ் அரசைவிட மோடி அரசு மிக மோசமானதாக செயல்படுகிறது!

இந்திய தேசிய தொழிலாளர் ஆணையம் பரிந்துரையின் அடிப்படையில் இருந்து வந்த 44 தொழிலாளர் சட்டங்களை, ஒன்றிய மோடி அரசு ஒருங்கிணைப்பு என்ற பெயரில் 15 சட்டங்களை முழுவதுமாக ரத்து செய்துவிட்டு மீதமுள்ள 29 சட்டங்களை மட்டும் 4 தொகுப்புகளாக மாற்றியுள்ளது. மேற்கண்ட 44 தொழிலாளர் சட்டங்களில் 1200க்கும் மேற்பட்ட சட்ட உட்பிரிவுகள் இருந்தன, ஆனால் தற்போது 29 சட்டங்களை மட்டும் 4 தொகுப்புகளாக மாற்றிய பிறகு 490க்கும் உட்பட்ட சட்ட பிரிவுகளே உள்ளதாக தெரிவிக்கின்றனர் மீதம் உள்ள அனைத்து சட்ட உட்பிரிவுகளும் நீக்கப்பட்டுவிட்டது.

மேலும் மோடி அரசால் ரத்து செய்யப்பட்ட 15 சட்டங்களிலும் தொழிலாளர்களின் பணிபாதுகாப்பு, ஊதியப்பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு போன்ற பல முக்கிய சட்டங்களை உள்ளடக்கியவையாகும். இவை அனைத்தும் கடந்த காலத்தில் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் கூட்டமைப்பு மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் அன்றைய ஒன்றிய அரசிடம் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் பல கட்ட விவாதங்களுக்குப் பிறகுதான் சட்டமாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதைய மோடி அரசு 4 தொழிலாளர் தொகுப்புச் சட்டங்களை நாடாளுமன்றத்தில் அவசரக்கதியில் தாக்கல் செய்ததோடு, இரு அவைகளிலும் உள்ள எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு விவாதிக்க போதிய வாய்ப்பு தராமலும், நாடாளுமன்ற ஜனநாயகத்தை மதிக்காமலும் மாநில அரசுகளிடம் முறையாக கலந்தாலோசிக்காமலும், இந்திய தொழிலாளர் கூட்டமைப்பில் விவாதிக்காமலும் சர்வாதிகார முறையில் தன்னிச்சையாக பெரு முதலாளிகளுக்கு ஆதரவாகவும், கார்புரேட்டுகளுக்கு சாதகமாகவும் கீழ்கண்ட 4 தொழிலாளர் தொகுப்பு சட்டங்களை மோடி அரசு அமல்படுத்தியுள்ளது.


1. தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணியிட சூழல்கள் சட்ட தொகுப்பு 2020 THE OCCUPATIONAL SAFETY, HEALT HAND WORKING CONDITIONS CODE 2020. (இதில் 13 சட்டங்களை ஒருங்கிணைத்து ஒரே சட்ட தொகுப்பாக மாற்றி சட்டமாக்கியுள்ளனர்.)

2. சமூக பாதுகாப்பு தொகுப்பு சட்டம் – 2020
CODE ON SOCIAL SECURITY 2020
(இதில் 9 சட்டங்களை ஒருங்கிணைத்து ஒரே சட்ட தொகுப்பாக மாற்றியுள்ளனர்.)

3. ஊதிய தொகுப்பு சட்டம் – 2019 .
CODE ON WAGES 2019
(இதில் 4 சட்டங்களை ஒருங்கிணைத்து ஒரே சட்ட தொகுப்பாக மாற்றியுள்ளனர்)

4. தொழில் உறவுச்சட்ட தொகுப்பு 2020
INDUSTRIAL RELATIONS CODE 2020
(இதில் 3 சட்டங்களை ஒருங்கிணைத்து ஒரே சட்ட தொகுப்பாக மாற்றியுள்ளனர்)

மேற்கண்ட 4 தொழிலாளர் தொகுப்பு சட்டங்களையும் அமல்படுத்த கூடாது எனவும், நமது தொழிலாளர் வர்க்கம் 100 ஆண்டுகளுக்கு மேல் போராடி பெற்ற பணி பாதுகாப்பு, ஊதிய பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு போன்ற பல உரிமைகளையும், சலுகைகளையும் விட்டுத்தர முடியாது எனவும், மோடி அரசிடம் இருந்து பாதுகாக்கவும் கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக இந்திய ஒன்றியத்தில் உள்ள அனைத்து தொழிற்சங்க அமைப்புகளும் குறிப்பாக LPF, HMS, AITUC, INTUC, CITU, AICCTU, MLF, LTUC, LLF, AIUTUC – போன்ற பல அமைப்புகள் ஒன்று கூடி கூட்டங்கள் நடத்தி, நாடு தழுவிய அளவில் நான்கு முறை பொது வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். இந்த போராட்டங்களில் 25 கோடிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டு மோடி அரசுக்கு எதிராக தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.



**மு.இராஜகாந்தம்**
*மாநில துணை செயலாளர்*
*தொழிலாளர் அணி*

இது போன்ற பல காரணங்களால் 4 தொழிலாளர் தொகுப்புச் சட்டங்களையும் அமல்படுத்த காலதாமதப்படுத்தி வந்த பா.ஜ.க. அரசு பீகார் சட்டமன்ற தேர்தல் முடிந்ததும், இந்திய தொழிலாளர் வர்க்கத்திற்கு விரோதமான மற்றும் துரோக தொழிலாளர் சட்டங்களை 21.11.2025 முதல் நடைமுறைப்படுத்த நிர்வாக ரீதியிலான அறிவிப்பினை வெளியிட்டது. இந்த நாளை இந்திய ஒன்றியத்தின் தொழிலாளர் வர்க்கம் கருப்பு தினமாகவே கருதுகின்றனர். இன்னும் சொல்லப்போனால் நம்மை ஆண்ட பிரிட்டிஸ் ஆட்சியாளர்கள் வழங்கிய பல தொழிலாளர் பாதுகாப்பு நல சட்டங்களையும் மோடி அரசு நீக்கியுள்ளது, மாற்றியுள்ளது என்பதுதான் வேதனைக்குரிய செய்தியாகும்.

பா.ஜ.க. அரசால் கொண்டுவரப்பட்டுள்ள 4 தொழிலாளர் தொகுப்பு சட்டங்களினால் தொழிலாளர் வர்க்கத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றி சுருக்கமாக பார்த்தோமானால், மோடி அரசால் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட தொழிலாளர் சட்ட தொகுப்புகள் தொழிலாளர் நலனில் எந்தவித தொடர்பும் இல்லாமல், தொழில் செய்வதை எளிதாக்குவதோடு கார்புரேட் முதலாளிகள் தொழிலாளர்களை தமக்கு தேவைப்படும்போது வேலைக்கு வைத்துக் கொண்டு, தேவையற்றப் போது நீக்கி விடுவதற்குமே கொண்டுவரப்பட்டன என்பது தெளிவாக தெரிய வந்துள்ளது. புதிய தொழிலாளர் சட்ட தொகுப்புகள் ஆலை முதலாளிகளுக்கு சாதகமாக தொழிலாளர்களை மீண்டும் காலனி ஆதிக்கத்திற்கு கொண்டு சென்றிருப்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

நிலையாணை சட்டம் (Standing Order) ஐம்பது தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும் என பல ஆண்டுகளாக இருந்து வந்ததை, தற்போது மோடி அரசு 300 தொழிலாளர்களுக்கு மேல் பணி செய்யும் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே பொருந்தும் என மாற்றியுள்ளது. இதனால் கோடிக்கணக்கான தொழிலாளர்கள் பணி பாதுகாப்பின்றியும், சட்ட பாதுகாப்பின்றியும் மற்றும் ஊதிய பாதுகாப்பின்றியும் பணி செய்யும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய நிலையான சட்டமானது தற்காலிக தொழிலாளர்கள் (Casual), பயிற்சியாளர்கள் (Trainees), மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பொருந்தாது என மோடி அரசு தெரிவித்துள்ளது.

நடைமுறையில் இருந்த தொழிலாளர் நல சட்டப்படி 100 மற்றும் 100க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணி செய்யும் தொழிற்சாலை அல்லது நிறுவனத்தின் நிர்வாகம் ஆலையை பணியிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைப்பது (Lay Off) அல்லது தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைக்க நினைத்தல் மற்றும் ஆலை மூடல் போன்ற ஆலை நிர்வாகத்தின் செயல்பாடுகளுக்கு அரசின் அனுமதியை பெற வேண்டும் என்று இருந்த சட்டத்தை ஒன்றிய மோடி அரசு 300 மற்றும் 300க்கும் கீழ் தொழிலாளர்கள் பணி செய்யும் தொழிற்சாலைகளுக்கு Lay Off விடுவதற்கும், ஆட்குறைப்பு செய்வதற்கும், மற்றும் ஆலை மூடலுக்கும் அரசின் அனுமதி தேவையில்லை என மோடி அரசு நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றியுள்ளது.

இந்திய ஒன்றியத்தில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 80 சதவீதம் பேர் 300க்கும் குறைவான தொழிலாளர்கள் உள்ள தொழிற்சாலைகளில்தான் பணியில் உள்ளனர். மோடி அரசின் இந்த புதிய சட்டத்தினால் பல கோடி தொழிலாளர்களை சமூக பாதுகாப்பின்றியும், சட்ட பாதுகாப்பின்றியும் மற்றும் ஊதிய பாதுகாப்பின்றியும் பணி செய்யும் ஆபத்தான சூழலை உருவாக்கியுள்ளது.

தொழிலாளர்களின் அடிப்படை உரிமையான வேலை நிறுத்தமானது தொழிற்சங்கம் மூலமாகவோ அல்லது தொழிலாளர் கூட்டமைப்பு மூலமாகவோ 15நாட்களுக்கு முன் அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்பதை மோடி அரசு 60 நாட்களுக்கு முன்னதாகவே கொடுக்க வேண்டும் என சட்டம் மாற்றப்பட்டுள்ளது. இதனால் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய தீர்வு காலதாமதமாக்கவே வழிவகை செய்வதோடு, வேலைநிறுத்த போராட்டத்தையும் நீர்த்துப் போக செய்யும் செயலாகும்.

தொழிற்சங்கங்கள் நிறுவுவதை மோடி அரசின் புதிய சட்டங்கள் மிகவும் கடுமையாக்கியுள்ளது. தற்போது உள்ள சட்டப்படி ஏழு தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தனக்கான சங்கத்தை அமைத்துக் கொள்ளலாம் என உள்ளது. ஆனால் புதிய சட்டத்தில் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 10 விழுக்காட்டினர் அல்லது 100 தொழிலாளர்கள் இருந்தால் மட்டுமே சங்கம் அமைக்க முடியும் என சட்டத்தை மாற்றியுள்ளனர். மேலும் இந்த சங்கம் அங்கீகாரம் பெற வேண்டுமானால் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 51 விழுக்காடு ஆதரவு பெற்றால் மட்டுமே அந்த சங்கமானது அங்கீகரிக்கப்பட்டு நிர்வாகத்தினருடன் கலந்து பேசும் உரிமை உடையதாக கருதப்படும். சங்க அங்கீகாரத்திற்கு ரகசிய வாக்கெடுப்பு சம்மந்தமாக சட்டத்தில் எதுவும் இடம் பெறவில்லை. மாறாக சங்க அங்கீகாரத்திற்கு சரிபார்ப்பு முறை (Verification Method) கடைப்பிடிக் கப்படும் என தெரிவித்திருப்பது, ஆலை முதலாளிகள் சங்கங்களை தங்களின் கைப்பாவையாக மாற்றிவிடும் பேராபத்து உள்ளது.

புதிய தொகுப்பு சட்டத்தில் கால நிர்ணயத்துடன் கூடிய வேலை முறையை (Fixed Employment) அறிமுகப்படுத்தியுள்ளனர். இத்திட்டத்தில் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு காலம் ஆலை முதலாளிகளால் தீர்மானிக்கப்படுகிறது. இந்த முறையில் வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்கள் தொடர்ந்து பணி கோரவோ, பணி நிரந்தரம் கோரவோ, தொழிற் தகராறு எழுப்பவோ மேலும் நீதிமன்றத்தில் முறையீடு செய்ய முடியாது, இதனால் தொழிலாளர்கள் பணி பாதுகாப்பற்றவர்களாகவும், ஊதிய பாதுகாப்பற்றவர்களாகவும், மற்றும் சமூக பாதுகாப்பற்றவர்களாகவும் உண்டாகும் சூழல் உருவாகியுள்ளது.

மோடி அரசின் புதிய தொழிலாளர் தொகுப்பு சட்டத்தில் தொழிற்சாலைகளில் மேற்பார்வையாளர்கள் யார் என்பதை தெளிவுபடுத்தாமல் எந்த ஒரு தொழிலாளர் ரூ.18000/க்கும் மேல் ஊதியம் பெருகிறார்களோ அவர் மேற்பார்வையாளராக கருதப்படுவார் எனவும் அவர் தொழிலாளி மற்றும் பணியாளர் என்ற வரம்பிற்கு வெளியே தள்ளப்படுவார் எனவும், மேலும் ஒரு தொழிலாளியின் ஊதியம் மட்டுமே மேற்பார்வையாளர் தகுதிக்கு தேவை என்பதை மறுத்திருப்பது ஏற்கனவே உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கு எதிரானவையாகும்.

தொழிலாளர்களின் சமூகபாதுகாப்பிற்கான புதிய சட்ட தொகுப்பில், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு கொடுப்பதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு வைப்புநிதியோ அல்லது தொழிலாளர் காப்பீட்டு நிதியத்திற்கு பங்களிப்பு வழங்க வழிவகை செய்யப்படவில்லை. இதனால் 90 விழுக்காடு அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்களை மோடி அரசு புறக்கணித்துள்ளது.

பா.ஜ.க. ஆட்சியானது தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு விரோதமாகவும், எதிராகவும் தொடர்ந்து செயல்பட்டு வருவதோடு, தொழிலாளர்வர்க்கம் காலங்காலமாக பெற்று வந்த உரிமைகளை அழித்து, அடிமைத்தனத்தை திணித்துள்ளது. மேலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை மத்திய புலனாய்வுத்துறை (CBI) அமலாக்கத்துறை (ED) வருமானத்துறை (IT) போன்ற அமைப்புகள் மூலமாக பாஜக ஆட்சி செய்யாத மாநிலங்களை தொடர்ந்து அச்சுறுத்தி வருவதை தொழிலாளர்வர்க்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தொழிலாளர்களின் பாதுகாவலர் கழக தலைவரின் கரத்தை வலுப்படுத்த ! கழக ஆட்சி மீண்டும் மலர !! தொழிலாளர்வர்க்கம் எப்போதும் உறுதுணையாக நிற்கும் !!

எல்லோருக்கும் ஏற்றம், எல்லோருக்கும் எல்லாம் என்ற கோட்பாட்டின்படி திராவிடமாடல் ஆட்சி நடத்திவரும் தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பல லட்சம் கோடி முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து, பல நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளை உருவாக்கி, பல லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினையும் வழங்கி தமிழர்களின் முன்னேற்றத்திற்காகவும், தமிழ்நாட்டை தொழில் வளச்சியில் முதன்மை மாநிலமாக கொண்டுவரவும் மேலும் ஒரு டிரில்லியன் பொருளாதார இலக்கு என்ற உயர்ந்த இலட்சியத்தை அடைய இரவு பகல் பாராமல் அயராது உழைத்து வரும் கழக தலைவர் தளபதி அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் தொழிலாளர் வர்க்கம் என்றென்றும் உங்களது பின்னால் அணிவகுத்து நிற்போம் என தெரிவித்துக் கொள்வதோடு.

வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தொழிலாளர் தோழர்களும், பாட்டாளிவர்க்கமும் இரவு பகல் பாராமல், கண் துஞ்சாமல் ஒவ்வொருவரும் உரிமையோடும், உணர்வோடும் உழைப்போம், உழைப்போம், வெல்வோம். மீண்டும் கழக தலைவர் தலைமையில் தொழிலாளர் நல ஆட்சி அமைய உறுதியேற்போம் ! படைப்போம் வரலாறு !!